**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** உரக்கடன்களைத் தள்ளுபடி செய்கிற உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை. ஆனால் உறுப்பினர் அவர்கள் சொல்கிறமாதிரி திருமயம், கொளத்தூர், ஆலங்குடி, போன்ற புதுக்கோட்டையைச் சேர்ந்த இடங்களில் வரட்சி உச்சகட்டத்தில் இருந்தது உண்மை. அந்த நிலையிலும் இந்த மாதிரிக் கடன்களைத் தள்ளுபடி செய்யமுடியாது. ஆனால் வரட்சி ஏற்பட்ட காரணத்தினால் விளைச்சல் இல்லை என்ற காரணத்தினால் கூடுமானவரையில் எந்தெந்த இடங்களில் அவசியமோ அந்தந்த இடங்களில் நிலவரி தள்ளுபடி செய்வதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்கும். ஆனால் சமீபத்தில் ஒரு ஆறு மாத காலமாக இந்த உரக் கடன்களை ஒத்திவைப்பதற்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது.

### விராச்சிலை பேருந்து நிலையத்தில் ஆக்கிரமிப்பு

* 67 வினா—**புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதியிலுள்ள விராச்சிலையில் பேருந்துகள் நிற்குமிடத்தில், பொதுமக்களுக்கும், பேருந்துப் போக்குவரத்திற்கும் இடையூறு செய்யும் வகையில் 1968-69-ல் ஆக்கிரமிப்பு செய்து கடைகள் வைத்திருப்பதை அகற்ற திருமயம் வட்டத் தாசில்தாரால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** குறிப்பிட்ட ஆக்கிரமிப்பை அகற்ற திருமயம் வட்டத் தாசில்தார் தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 68 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

### வேட்டாங்குளம் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 69 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தாலூக்கா வேட்டாங்குளம் கிராமத்திலுள்ள அரிசன மக்கள் வீட்டுமனைக் கோரி ஏதேனும் விண்ணப்பம் எழுதியுள்ளார்களா ?

(இ) ஆம் எனில், எந்த தேதியில்? எத்தனை பேர்கள் ?

(உ) அதன் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) 11—8—1969 ; 53 பேர்கள்.

(உ) வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவரின் செயற்குறிப்புக்கு, சமூக நலத்துறையின் 24—1—1970 நாளிட்ட 190—ம் எண் அரசு ஆணையில், அரசு ஏற்பளித்தது. நிலக் கையகப்

1970 ஆகஸ்ட் 27]

படுத்துதல் திட்டத்தின் 4 (1) பிரிவின் கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பு, 18—2—1970 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. 5-ஏ பிரிவின்படிக்கான விசாரணையை நடத்திய பிறகு, மாவட்ட ஆட்சித் தலைவர் அரசின் ஒப்புதலுக்காக வரைவு அறிவிப்புச் செயற்குறிப்புகளை அனுப்பியுள்ளார். 21—7—1970 நாளிட்ட 1907-ம் எண் அரசு ஆணையில், அவற்றிற்கு அரசு ஏற்பு அளித்துள்ளது. விரைவில் அவை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஹரிஜன மக்கள் வீட்டு மனைகள் வேண்டி மனுக்கள் போட்டாலும் வருடக் கணக்கில் அவர்கள் காத்துக்கொண்டிருக்கக்கூடிய அளவிற்கு ஒரு சூழ்நிலை உள்ளது. இதைத் தவிர்ப்பதற்காக வேண்டி யார் யாருக்கெல்லாம் வீட்டு மனைகள் தேவைப்படுகின்றனவோ, யார் யாருக்கெல்லாம் வீடு இல்லையோ அதுபற்றி அறிந்துகொள்ள ஒவ்வொரு ஹரிஜனக் காலனிக்கும் நேரடியாகச் சென்று அதைப் பரிசோதனைசெய்து அந்த அடிப்படையில் வீட்டு மனைகள் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** வீடு இல்லாதவர்களுக்கு வீட்டு மனைகள் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் முடிவு எடுத்து அந்த வகைப்படி செயலாற்றிக்கொண்டு வருகிறது. ஏறத்தாழ 1½ லட்சம் பேர்களுக்கு இதுவரையில் வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் மூன்றில் ஒரு பங்கு ஹரிஜன மக்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சில ஹரிஜன மக்கள் அவர்கள் வாழ்கிற பகுதியிலேயே இடம் வேண்டுமென்று கேட்கிறார்கள், அந்த இடங்கள் தனியார்களுக்குச் சொந்தமான பட்டா நிலங்களாக இருக்கின்றன. பட்டா நிலங்களை கையகப்படுத்த வேண்டுமென்றால் அதற்குப் பல படிகளைத் தாண்ட வேண்டியிருக்கிறது. எனவே காலதாமதமாகிறது.

## அரிசனங்களுக்கு வீடு கட்ட மான்யம்.

* 70 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆதி திராவிட மக்களுக்குக் கடனும் மான்யமும் வழங்கி வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஆதி திராவிட மக்களுக்குக் கடனும் மான்யமும் வழங்கி வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் நடைமுறையிலேயே உள்ளது. 9. 30 a.m.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** ஹரிஜனங்களுக்கு என்று தனிப்பட்டு ஒதுக்கப்பட்ட பகுதியில் மனை கொடுக்காமல் மற்ற சமூக மக்களோடு அவர்கள் சேர்ந்து வாழ்வதன்மூலம், இருக்கிற கீழான நிலைமை மாறுவதற்குரிய வகையில் புதிய காலனிகள்